தினமணி

# அழுத பிள்ளைக்குத்தானே பால்?

ஆர். செல்வம்

First Published : 18 Jan 2011 12:55:14 AM IST

ஒன்றரை அடி உயரமும் 2-3 கிலோ எடையுடன் பிறந்த நம்மைத் தாய்ப்பாலுக்குப்பின் இப்போதுள்ள உருவத்துக்கு வளர்த்தவர்கள் விவசாயிகள்தானே? இந்த ஆழமான உண்மையைப் பாரதப் பிரதமர் முதல் கடைசிக் குடிமகன்வரை எல்லோரும் செப்கரியமாக மறந்துவிடுகின்றனர்.

பிரதமர் மன்மோகன் சிங், விவசாயத் துறை வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டும்; பசுமைப் புரட்சிக்குப் பின் புதிய தொழில் நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடையவில்லை; விஞ்ஞானிகளுடைய கண்டுபிடிப்புகள் விவசாயிகளிடம் செல்ல வேண்டும், என்றெல்லாம் பேசுவாரா?

இவர் மட்டுமல்ல, மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், திட்டக்கமிஷன் துணைத்தலைவர் அலுவாலியா, உணவு அமைச்சர் பவார் எனப் பலரும் இதே கருத்தை எதிரொலிக்கின்றனர். வேடிக்கை என்னவென்றால், விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று முழங்கும் மன்மோகன் சிங் அரசு ஒரு சந்தர்ப்பத்தில்கூட விவசாயிகள் வாழ்வு எப்படியுள்ளது என்றோ, விவசாயிகள் வருவாய் எவ்விதமுள்ளது என்றோ பேசியதில்லை.

அரசு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எந்த விவசாயப் பல்கலைக்கழகங்களும் விவசாயத் தற்கொலைகள் பற்றி விவாதிக்கவில்லை. ஒரு பல்கலைக்கழகம்கூட தன் சொந்தக்காலில் நின்று தற்சார்பில் வாழ்ந்த விவசாயிகள் வாழ்வு ஏன் இப்படிச் சிதைந்துபோனது என்று ஆராயவில்லை.

ஆங்கிலேயரின் சுரண்டல், அடிமை ஆட்சியின்போது விளைந்ததில் பெரும் பகுதியை வரியாகப் பிடுங்கிக் கொண்ட போதும்கூட நிகழாத அளவிலான தற்கொலைகள் கடந்த பத்தாண்டுகளில் மட்டும் ஏன் நிகழ்ந்திருக்கின்றன என யாரும் யோசிக்கக்கூடத் தயாராக இல்லை. இந்த அவலத்தைப் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள்கூட அலசவில்லை.

இது போன்றதொரு அவலம் - இதில் நூறில் ஒரு பங்கு அவலம் தொழில் துறையிலோ, சேவைத் துறையிலோ நிகழ்ந்திருந்தால் அனைத்துப் பத்திரிகைகளிலும் முதல்பக்கச் செய்தியாகி இருக்கும். தொலைக்காட்சிகளில் முக்கிய நேரத்தில் விவாதப் பொருளாகியிருக்கும்.

உணவுதானே, இவர்கள் தராவிடில் இறக்குமதி செய்து கொள்ளலாம் என்ற எண்ணம்தான் இதற்குக் காரணமாக இருக்கக்கூடும். சில ஆண்டுகளுக்குமுன் அப்போதைய நிதியமைச்சர், இன்றைய உள்துறை அமைச்சர், ஈரோட்டில் நடந்த விவசாயிகள் மத்தியில் ஏன் நெல் போன்றவற்றை விளைவிக்கிறீர்கள்? ஏற்றுமதிக்கானவற்றை விளைவியுங்கள். உலகச் சந்தையில்

நீங்கள் விளைவிக்கும் விலையைவிட மலிவான விலையில் உணவு தானியங்கள் கிடைக்கின்றன என்றார். உண்மையில் அது அவரது குரல் அல்ல. இந்தியத் தொழில் அதிபர்களின் குரல். அந்த அதிபர்களின் அமைப்பு அன்றைய இந்தியப் பிரதமரான வாஜ்பாயிடம் சொன்னது, இந்தியாவின் தேசிய வருவாயில் விவசாயிகளின் பங்கு 22 சதமாக உள்ளது. அரசு அவர்களுக்குச் செலவிடும் அளவோ 60 சதமாக உள்ளது. ஆகவே, அவர்கள் எண்ணிக்கையை 25 சதமாகக் குறைக்க வேண்டும் என்று.

அந்த அமைப்பின் மற்றொரு குரலையும் அவர் பிரதிபலித்தார். 25 சத விவசாயிகள் மட்டும் விவசாயத்தில் இருங்கள். பிறரெல்லாம் வெளியேறுங்கள், விலகுங்கள், என்பதே அது.

விலகுங்கள் என்றால் விவசாயத்திலிருந்து விலகினாலும் சரி, பூமியிலிருந்து விலகினாலும் சரி, விலக வேண்டும். அதனால்தான் விவசாயிகளின் தற்கொலைகள் சாதாரணமானதாகப் பார்க்கப்படுகிறதோ?

தங்கள் உயிரைக் காக்கும், உடலை வளர்க்கும் விவசாயிகளின் அகால மரணங்களை ஏன் தடுக்கவில்லை என்று மற்ற துறைகளில் உள்ள படித்த கூட்டம் - ரயில் தாமதம், மின்வெட்டு என்பதற்கெல்லாம் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதும் படித்த வர்க்கம் - கேட்டிருந்தால் நன்றியுள்ளவர்களாக இருந்திருப்பர். விவசாயிகள் நிலையும் சற்றே திருந்தியிருக்கும். தங்களது உணவு எப்படி விளைகிறது? எத்தனை பேரின் வியர்வை, ரத்தத்தால் ஆனது, நம் உணவானது தொழிற்சாலைகளால், கம்பெனிகளால், இடைத்தரகர்களால், சமயங்களில் அதிகாரிகளால் எத்தனை முறை சுரண்டப்பட்ட பின் நம் வயிற்றைச் சென்றடைகிறது என்பதை எல்லாம் யாரும் சிந்தித்துக்கூடப் பார்ப்பதில்லை. உணவு உருவாகும் வித்தை எந்தப் பாடப் புத்தகத்திலும் இல்லை. அக்பரும், அசோகரும் என்ன செய்தார்கள் என்பதைவிட விவசாயிகள் என்ன செய்கிறார்கள்? உணவு எப்படி உருவாகிறது என்கிற அறிவு தேவையற்றதாக உள்ளது.

ஏன் இந்த அவலம்? என்ன செய்தால் நல்லது. இதற்கு நோயின் மூலம் தெரியவேண்டும். நூற்றாண்டு கால விவசாயமும் வாழ்வும் கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் சிதைந்தது ஏன் என்ற நோயின் மூலக்கூறு தெரிய வேண்டும்.

கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் விவசாயம் செய்யப்போவதாகக் கூறும் மாணவ, மாணவிகள் 1 சதம்கூட இல்லை. மாடும், காடும் உள்ளது. படிப்பு ஏறாவிட்டாலும் பிழைத்துக் கொள்வான் என்று கூறிய 30 ஆண்டுகளுக்கு முந்தைய தந்தையர் ஒருவர்கூட இல்லை இன்று. அதனால்தான் பட்டிதொட்டியெல்லாம் ஆங்கிலப் பள்ளிகள். அங்கு பயில்வோரெல்லாம் விவசாயியின் பிள்ளைகளே.

45 சத விவசாயிகள் விவசாயத்தைவிட்டு ஓட விரும்புகிறார்கள் என விவசாயிகள் கமிஷனின் தலைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் குறிப்பிடுகிறார். சிறந்த பள்ளியில் "சிறந்த கல்வி கற்று விவசாயத்திலிருந்து ஓடட்டும் தன் பிள்ளை' என்ற மாற்றம் எப்படி நடந்தது?

எல்லாம் திணிக்கப்பட்ட ஒன்று. ஜான் பெர்கின்ஸ் தன்னுடைய வேலை பற்றி ஒப்புதல் வாக்குமூலம்போல் எழுதிய "ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்' என்ற நூலைப் படித்தால் புரியும், எப்படியெல்லாம் திணிக்கப்படுகிறது என்பது.

திணிக்கப்பட்ட பசுமைப்புரட்சியைப் பற்றி பேசுவோரெல்லாம் நம் கண்முன் கொண்டுவருவது கொல்கத்தா வீதிகளில் வற்றிய வயிறும், தோல் போர்த்த எலும்புடலுமாக செத்து மடிந்த 30 லட்சம் இந்தியர்களின் மரணத்தையே. இது போன்றதொரு பஞ்சம் வரக்கூடாது என்பதற்காகத்தான் பசுமைப் புரட்சி கொண்டுவரப்பட்டது என்று கூறுவார்கள். ஆனால், பஞ்சம் ஏன் நிகழ்ந்தது என்று எவரும் கூறுவதில்லை. கொத்துக்கொத்தாய் இந்தியர் செத்து மடிந்த அதேவேளையில் அதே கொல்கத்தாவின் துறைமுகத்திலிருந்து ஆங்கிலேய அரசு அரிசியையும், சர்க்கரையையும் கப்பல் கப்பலாக ஏற்றுமதி செய்தது உலக வர்த்தகத்துக்காக.

தனக்கென எதையும் வைத்துக்கொள்ள முடியாதபடி விளைந்ததையெல்லாம் பிடுங்கி லாபம் பார்க்கக் கப்பலில் அனுப்பியதால் நேர்ந்தது அந்தப் பஞ்சம். அது உலக அரங்கில் தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டதை மறைக்கவே ரேஷன் திட்டமும் வந்தது. ஒருவர் உயிரோடு இருக்க எவ்வளவு சக்தி தேவையோ அந்த அளவே உணவு தானியங்கள் வழங்கினர். இன்றும் அதே பார்வைதான்.

சாவைக் காட்டியே இன்சூரன்ஸ் தொழிலும், ஆங்கில மருத்துவக் கம்பெனிகளும் வாழ்வதைப்போலவே, கொல்கத்தா பஞ்சத்தைக் காட்டியே விவசாயக் கம்பெனிகளும் அவர்களுக்கான விஞ்ஞானிகளும் வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையை ஓட்ட விவசாயிகளின் தற்கொலைகள் அவசியமாகிவிட்டது.

இந்த நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் விளைச்சலை அதிகப்படுத்த வேண்டும். புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடியுங்கள் என்கிறார். அவர் உள்ளிட்ட பெரும்பாலானவர்களுக்கு ஓர் உண்மை பிடிபடவில்லை. வைப்புத் தொகையை தீர்த்துவிட்டால் வட்டி கிடைக்காது என்பது தெரிந்த பொருளாதார மேதைகள் விவசாயத்திலும் அதுவே நடந்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ளவில்லை.

பயிர் வளர்ச்சியின் ஆதாரம், விளைச்சலின் முதல் மூலம், வளமான, உயிரோட்டமுள்ள விளைநிலம். அமெரிக்கக் கம்பெனிகளின் நலனுக்காகத் திணிக்கப்பட்ட இடுபொருள்களும், திணிக்கப்பட்ட தொழில்நுட்பங்களும் 10,000 ஆண்டுகாலம் வளமிழக்காமல் இருந்த நிலத்தை சில பத்தாண்டுகளில் கிழடு தட்டச் செய்துவிட்டன. இன்று தமிழகம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவின் விளைநிலங்கள் வளமிழந்து மலட்டு நிலமாக உள்ளன. மொத்த வைப்புத் தொகையும் காலி. வட்டி வேண்டும், அதுவும் அதிகம் வேண்டும் என்கிறார்கள். இது எப்படிச் சாத்தியம்?

இப்போது நிலம் மலடாகிக் கொண்டுள்ளது என்பதும் அதற்கு ரசாயன உரங்கள்தான் காரணம் என்பதும் விவசாயப் பின்புலத்தில் உள்ள எம்.எல்.ஏ, எம்.பி.க்களுக்குத் தெரியும். ஆனால் இந்த உண்மையை உரைக்க மறுக்கிறார்கள். காரணம், மெத்தப் படித்த வேளாண் பல்கலையின்

விஞ்ஞானிகள் சொல்வது தானே ஏற்கும் என்ற உணர்வு. நிதர்சனத்தைச் சொல்லி இதற்குத் தீர்வு கொடுங்கள் என்று உத்தரவிடும் இடத்தில் இருப்பவர்கள் இவர்கள். ஆனால், விஞ்ஞானிகளை ஆள அனுமதித்துவிட்டுத் தங்கள் அனுபவத்தை ஒதுக்கிவிட்டார்கள். தங்கள் பட்டறிவை, அனுபவ உண்மையை ஒதுக்கிவிட்டு விஞ்ஞானிகள் சொல்வதை - ஏவலாளி சொல்வதைக் கேட்கும் நிலையில் உள்ளனர்.

இந்தியா போன்றதொரு, 110 கோடி மக்கள்தொகை கொண்ட நாடு தனது விவசாயிகளைக் கொன்றொழித்துவிட்டுக் கம்பெனிகள் மூலம் மக்களுக்கான உணவைப் பெற முடியாது. தனக்கான உணவைக் கையேந்திப் பெற முடியாது. சுதந்திரமாக இருக்க முடியாது. நம் விவசாயிகள் பிற தொழிலில் உள்ளவர்களைவிட கெப்ரவமாக வாழ வழி செய்ய வேண்டும். அதற்குத் தேவை மேலோட்டமான நடவடிக்கைகள் அல்ல. வேளாண்மைத் திட்டங்களில் அடி முதல் நுனி வரை மாற்றம் தேவை. பார்வையில் மாற்றம், சிந்தனையில் மாற்றம் தேவை, மக்கள் மீதான ஆத்மார்த்தமான அக்கறை தேவை.

இந்திய விவசாயிகளுக்காகப் பரிந்து பேச, அவர்களது பிரச்னைகளை நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும், மக்கள் மன்றத்திலும் விவாதிக்க யாருமில்லையே, ஏன்?

எல்லாம் வரும். எல்லாம் கிடைக்கும். என்ன சொல்லி என்ன, அழுத பிள்ளைக்குத்தானே பால்?

**ஜன. 27-ல் விவசாயிகளுக்கான மீன் வளர்ப்புப் பயிற்சி தொடக்கம்**

First Published : 17 Jan 2011 01:43:39 PM IST

திருச்சி, ஜன. 16: சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு ஜன. 27 முதல் இரண்டு நாள்களுக்கு மீன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது என்றார் அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் அ. சகுந்தலை.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருச்சி மாவட்டத்தில் சுமார் 72,800 ஹெக்டேர் டெல்டா பகுதியில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் சாகுபடியில் வருமானம் அதிக அளவில் காணப்படுவதில்லை. அதனால், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையில் கூடுதலாக ஏதேனும் ஒரு தொழிலை அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை உள்ளது.

இதன் அடிப்படையில், சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையம் விவசாயிகளுக்கு மீன் வளர்ப்புத் தொழில்நுட்பத்தை அளிக்கவுள்ளது. ஜன. 27-ம் தேதி அலங்கார மீன் வளர்ப்பு குறித்த பயிற்சியும், ஜன. 28-ம் தேதி உள்நாட்டு மீன் வளர்ப்பு குறித்தும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

ஆர்வமுள்ள விவசாயிகள், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், சிறுகமணி- 639115, தொலைபேசி எண் 0431-2614417 என்ற முகவரியில் முன்பதிவு செய்து பயன்பெறலாம் என்றார் அவர்.

**மானியத்தில் விவசாயக் கருவிகள் வழங்கல்**

First Published : 17 Jan 2011 12:21:39 PM IST

திண்டுக்கல், ஜன. 16: விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் கைத்தெளிப்பான் மற்றும் விசைத் தெளிப்பான் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து, வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ. பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

வடமதுரை வட்டாரத்தில் இறவை நிலையில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் தற்போது வளர்ச்சிப் பருவத்திலும், முதிர்ச்சிப் பருவத்திலும் காணப்படுகின்றன. பயிர்களை பூச்சி, நோய் தாக்காமல் இருக்க உழவர்கள் பயிர் பாதுகாப்புக் கருவிகளை வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்தி வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு, எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 50 சதவீத மானியத்தில் விசைத் தெளிப்பான் மற்றும் கைத்தெளிப்பான் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மானியத்தில் பயிர் பாதுகாப்புக் கருவிகள் தேவைப்படும் விவசாயிகள், வடமதுரை வேளாண் விரிவாக்க மைய கள அலுவலர்களை அணுகி பயன்பெறலாம்.

**விவசாயிகளுக்கு இடுபொருள் விநியோக முகாம்**

First Published : 17 Jan 2011 01:58:32 PM IST

ஆறுமுகனேரி, ஜன. 16: தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வேளாண் விநியோக முனைப்பு முகாம்கள் மூலம் இடுபொருள்கள், வேளாண் கருவிகள் வழங்கும் பணி மும்முரமாக நடைபெறுகிறது.

இது குறித்து, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜோசப் கருணாநிதி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாவட்டத்தில் அனைத்து வேளாண் திட்டங்கள் இன வாரியான மானியங்களுக்கு ஏற்ப பயனாளிகளைத் தேர்வு செய்து, உரிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

இடுபொருள்களான தரமான விதைகள், உயிர் உரங்கள், ரசாயன உரங்கள், நுண்ணூட்டக் கலவை உரங்கள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், மருந்துகள், பண்ணைக் கருவிகள், சொட்டுநீர்,

தெளிப்பு நீர் கருவிகள் ஆகியவை ஒவ்வொரு வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

நடமாடும் இடுபொருள்கள் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன. தேர்வுசெய்யப்பட்ட கிராமங்களில் வேளாண் இடுபொருள் விநியோக முனைப்பு முகாம்கள் வேளாண் துறை அலுவலர்களால் நடத்தப்படுகின்றன.

இம் முகாம்களில் விவசாயிகள் மானியப் பொருள்கள், இடு பொருள்கள், கருவிகளைப் பெறலாம் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கல்**

First Published : 17 Jan 2011 12:26:00 PM IST

சிங்கம்புணரி, ஜன. 16: சிங்கம்புணரியில் தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள் வழங்கும் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, ஒன்றியக் குழு துணைத் தலைவர் பெரியகருப்பன் தலைமை வகித்தார்.

தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராஜமூர்த்தி முன்னிலை வகித்தார்.

சிங்கம்புணரி வட்டாரத்தில் காளாப்பூர், செருதப்பட்டி, கோட்டைப்பட்டி, குமரிப்பட்டி, ஆலம்பட்டி, வையாபுரிப்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறை மூலம் ஏற்கெனவே அடையாள அட்டை அளிக்கப்பட்ட 35 பயனாளிகளுக்கு அசோஸ்பைரில்லம் பாஸ்பேட் பாக்டீரியா, பொட்டாஸ் சல்பேட் உள்ளிட்ட வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், பேரூராட்சித் துணைத் தலைவர் முத்துமுகமது, தி.மு.க. மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கபிலன், தோட்டக் கலைத் துறை துணை அலுவலர் ராமகிருஷ்ணன், உதவி அலுவலர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தினமலர்**

**கறிவேப்பிலை விளைச்சல் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,01:34 IST

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில் கடும் பனிப்பொழிவு காரணமாக இலைப்புள்ளி நோய் தாக்கம் ஏற்பட்டு கறிவேப்பிலை விளைச்சல் பாதித்துள்ளது. அதனால் கறிவேப்பிலை கிலோ 40 ரூபாய்

உயர்ந்துள்ளது.சேலம் ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் சுற்றுவட்டார பகுதியில் வாசனை பயிரான கறிவேப்பிலை 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.ஆத்தூர், தலைவாசல் பகுதியில் விளைவிக்கும் கறிவேப்பிலை "ருசி' மிகுந்து காணப்படுவதால் வியாபாரிகள் அதிகளவில் வாங்கி செங்கின்றனர். அதன்படி தலைவாசல் தினசரி காய்கறி மார்க்கெட்டிலிருந்து நாள்தோறும் சேலம், கோவை, திருச்சி, மதுரை, சென்னை, புதுச்சேரி, கேரளா என பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கறிவேப்பிலையில் வைட்டமின் "ஏ' மற்றும் இரும்பு சத்து அதிகளவில் உள்ளதால் ஞாபக சக்தியை அதிகரிக்கவும் கறிவேப்பிலை பயன்படுகிறது. கடந்த இரு மாதத்திற்கு முன் பெய்த பருவ மழையின்போது கறிவேப்பிலையில் இலைபுள்ளி, பூஞ்சானை நோய் தாக்கம் ஏற்பட்டது.தொடர்ந்து கடும் பனிப்பொழிவு காரணமாக கறிவேப்பிலை இலைகள் வளர்ச்சி இல்லாமல் கரும்புள்ளிகளும், சாம்பல் படிந்து காணப்படுகிறது. அதனால் கறிவேப்பிலை மகசூல் இல்லாததால், கிலோ 30 முதல் 40 ரூபாய் விற்பனை செய்யப்படுகிறது.இது குறித்து ஆத்தூரை சேர்ந்த கறிவேப்பிலை விவசாயிகள் கூறியதாவது:ஏக்கருக்கு 6,000 கறிவேப்பிலை செடிகள் நடவு செய்து, 15வது மாதம் முதல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அறுவடை செய்யப்படும். ஏக்கருக்கு 3 முதல் 5 டன் வரை மகசூல் இருக்கும். தற்போது கடும் பனிப்பொழிவில் கறிவேப்பிலை செடிகளில் இலைப்புள்ளி, பூஞ்சானை நோய் தாக்கியுள்ளது.நோயால் பாதிப்புக்குள்ளான இலைகள் காய்ந்து கருகி வருகிறது. தற்போது விளைச்சல் இல்லாததால் கறிவேப்பிலை கிலோ 40 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வேளாண் திட்டம் மூலம் ரூ.13.28 கோடி மானியம் வழங்கல்: கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,01:53 IST

கிருஷ்ணகிரி: ""கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் திட்டங்கள் மூலம் 13 கோடியே 28 லட்ச ரூபாய் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது,'' என கலெக்டர் அருண்ராய் தெரிவித்தார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் சிறப்பு முகாம் மாவட்டம் முழுவதும் நடந்தது. பெரியதள்ளப்பாடி கிராமத்தில் நடந்த சிறப்பு முகாமில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கி கலெக்டர் அருண்ராய் பேசியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் துறையின் சார்பில் கடந்த நான்கரை ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. விதைகள் மற்றும் இடுபொருட்கள் விநியோகம் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம், பருத்தி தொழில் நுட்ப மினி மிஷன் திட்டம், ஐசோபாம் எண்ணைய் வித்துகள் மற்றும்

பயறுவகைகள் திட்டம், விதை கிராம திட்டம், தேசிய வேளாண்மை மேம்பாட்டுத்திட்டம், நீர்வள நிலவளதிட்டம், உழவர் ஆர்வலர் குழு திட்டம், டான்வாபீ பண்ணை மகளிர் திட்டம், தென்னை வளர்ச்சி வாரிய உதவி திட்டம், ஆத்மா திட்டம், விதை பெருக்க திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் 1,39,157 விவசாயிகளுக்கு 13 கோடியே 28 லட்ச ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

வேளான் இடுபொருட்களை பெற அனைத்து கிராமபுறங்களும் பயனடையும் வகையில் 362 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. முகாமில் 28,570 விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இடுபொட்களை பயன்படுத்தி விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்து லாபம் பெறலாம். இவ்வாறு கலெக்டர் பேசினார்.வேளாண் இணை இயக்குனர் ராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன், பஞ்சாயத்து தலைவர் ராகவன், பெருமாள் மணிமேகலை கல்லூரி பேராசிரியர் ரவி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ரஸ்தாளி கரும்பு அறுவடை குறைந்திருப்பதால் விலை அதிகரிக்க வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,02:00 IST

நாமக்கல்: காளிப்பட்டி கந்தசாமி கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு நடவு செய்யப்பட்ட ரஸ்தாளி ரக கரும்பு அறுவடைப் பணி விறுவிறுப்பாக துவங்கியுள்ளது. சாகுபடி குறைந்தால் ரஸ்தாளி கரும்புகளின் விலை அதிகமாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம் அருகே காளிப்பட்டியில் பிரசித்தி பெற்ற கந்தசாமி கோவில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் தைபூசத்தை முன்னிட்டு கோவிலில் தேர்த்திருவிழா நடக்கும். சேலம், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்களைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான பக்தர்கள் தேர் திருவிழாவுக்கு வந்து செல்வர். தொடர்ந்து பத்து தினங்களுக்கு மேல் நடக்கும் தேர் திருவிழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

இந்தாண்டு காளிப்பட்டி கந்தசாமி கோவில் தைப்பூசத் திருவிழா வரும் 20ம் தேதி நடக்கிறது. திருவிழாவில் விசேஷ அம்சமாக ரஸ்தாளி ரக கரும்பு விற்பனை செய்யப்படுவது வழக்கம். திருவிழாவுக்கு வருவோர் இக்கரும்பை விரும்பி வாங்கிச் செல்வர். அதற்காக காளிப்பட்டி அதன் சுற்றுவட்டார கிராமங்களில் ரஸ்தாளி ரக கரும்பு விளைவிக்கப்படுகிறது.இது குறித்து சின்னஉப்புபாளையத்தை சேர்ந்த விவசாயி சின்னாக்கவுண்டர் தெரிவித்தாவது:காளிப்பட்டி கந்தசாமி கோவில் திருவிழா ஆண்டு தோறும் தைப்பூசத்தை முன்னிட்டு நடத்தப்படும். இந்தாண்டு

வரும் 20ம் தேதி திருவிழா நடக்கிறது. அதில் ரஸ்தாளி ரக கரும்பு விற்பனை செய்வது விசேஷமான ஒன்றாகும்.

இந்த ரகக் கரும்பு வெளிர்பச்சை நிறத்தில் இருக்கும்.இதன் சுவையும் அலாதியாக இருக்கும் என்பதால், அவற்றை மக்கள் விரும்பி வாங்கிச் செல்வர். இக்கரும்பு காளிப்பட்டி கோவில் திருவிழாவுக்கென விசேஷமாக வளர்க்கப்படுகிறது. பல ஆண்டுகளாக இக்கரும்பு விளைவிக்கப்படுகிறது.போதிய தண்ணீர் வசதியில்லாததால், இந்தாண்டு இக்கரும்பை நான் மட்டும் பயிரிட்டுள்ளேன். திருவிழா துவங்கும் சமயத்தில் விற்பனை செய்யப்படும். அதற்காக தற்போது கரும்பு அறுவடைப் பணி மேற்கொள்ளப்படுகிறது. ஒரு ஜோடி ரஸ்தாளி ரகக் கரும்பு 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல், காளிப்பட்டி கோவில் திருவிழாவுக்கென இக்கரும்பு பயிரிட்டு வருகிறேன்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**கரும்பு விற்பனை: வியாபாரிகளுக்கே கசப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,01:42 IST

இடைப்பாடி: பொங்கல் பண்டிகையின் போது, கரும்பு விலை கடுமையாக உயந்தது. விலை உயர்வால் விற்பனை பாதியாக குறைந்து வியாபாரிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.பொங்கல் பண்டிகை மூன்று நாட்கள் கொண்டாடப்படும். இந்த மூன்று நாட்களிலும் பொங்கலுடன் கரும்பு வைத்து வழிபாடு படையல் செய்வர். பொங்கல் பண்டிகைக்காக ரஸ்தாளி வகை கரும்பு பயிரிடப்படுகிறது. இந்த வகை கரும்புகள் கூடக்கல், பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி, நெடுங்குளம் ஆகிய பகுதிகளில் 1000க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்டது. பராமரிப்பு செலவுகள் கடுமையாக உயர்ந்ததை அடுத்து கரும்பு விலையும் உயர்ந்தது. கரும்பு விலை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு கடுமையாக உயர்ந்தது. கடந்த ஆண்டுகளில் 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு விலை 150 ரூபாய் வரை விற்கப்பட்டது. அதனால், ஒரு கரும்பு 10ல் இருந்து 15 ரூபாய் வரை தரத்தை பொறுத்து விற்பனை செய்யப்பட்டது.இந்த ஆண்டு 20 கரும்புகள் கொண்ட ஒருகட்டு 200 ரூபாயில் இருந்து 280 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

விலை அதிகமானதால், கரும்பு விற்பனை பாதியாக குறைந்தது. சேலத்தில் ஒரு கரும்பு 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.இது குறித்து இடைப்பாடியில் உள்ள கரும்பு வியாபாரி முருகேசன் கூறியதாவது:கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், கரும்பு விலை இரண்டு மடங்காகி உள்ளது. இந்த விலையேற்றத்தால், பொதுமக்கள் கரும்பு வாங்குவதை குறைத்துக்கொண்டனர். நாங்களும் வாங்கிய விலையை விட குறைத்து கொடுக்க முடியவில்லை. அதனால், கரும்பு

விற்பனை பாதியாக குறைந்துள்ளது. இன்னும் இரண்டு நாளில் கரும்புகளை விற்காவிட்டால், அவை காய்ந்து பெருத்த நஷ்டம் அடையும் நிலை உள்ளது, என்று தெரிவித்தார்.ஆண்டுதோறும் வியாபாரிகளுக்கு நல்ல லாபம் தந்த கரும்பு வியாபாரம், இந்த ஆண்டு விற்பனை வியாபாரிகளுக்கே கசந்தது.

**18 ம் கால்வாயில் தொடர் நீர் வரத்தால் நிலத்தடிநீர் மட்டம் ...உயர்ந்தது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,00:37 IST

கம்பம் : பதினெட்டாம் கால்வாயில் தொடர்ந்து தண்ணீர் விடப்படுவதால், கம்பம் பள்ளத்தாக்கில் ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள நிலங்களில், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். 18 ம் கால்வாய் திட்டப்பணிகள் நிறைவடைந்து கடந்த ஆண்டு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் கம்பம் பள்ளத்தாக்கில், ரோட்டிற்கு மேற்கு பக்கம் மானாவாரி காடுகளாக இருந்த பூமிகள் பயன்பெறும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்போது யாரும் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. மேலும் 18 ம் கால்வாய் செயல்பாட்டிற்கு வருமா என்பதில் கூட சந்தேகம் இருந்து வந்தது. இந்நிலையில் 18 ம் கால்வாயில் ஆண்டிற்கு 9 நாட்கள் மட்டும் தண்ணீர் திறந்து விட பொதுப்பணித்துறை அனுமதி வழங்கியது. ஆனால் அணையில் 125 அடிக்கு மேல் நீர்மட்டம் உயரும் போதும், அணை நிரம்பும் சமயங்களிலும் 18 ம் கால்வாயில் தண்ணீர் திறந்து விட முடிவு செய்யப்பட்டது. அதன்பேரில் கடந்த சில வாரங்களாக விட்டு விட்டு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. 18 ம் கால்வாயில் தொடர்ந்து தண்ணீர் வரத்து இருப்பதால், ரோட்டிற்கு மேற்கு திசையில் உள்ள மானவாரி நிலங்கள் பயனடைந்து வருகின்றன. குறிப்பாக கூடலூர், கம்பம், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, கோம்பை உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. தோட்ட விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. மானாவாரி காடுகளிலும் நிலத்தடி நீர் மட்டம் உயருவதால், பயறு வகைகள், நிலக்கடலை, துவரை, சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி குறிப்பிட்ட காலக்கெடுவில் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கம்பம் விவசாயத்துறை உதவி இயக்குநர் (பொ) ராமராஜ் கூறியதாவது: 18 ம் கால்வாயில் தொடர்ந்து தண்ணீர் வருவதால், கம்பம் பள்ளத்தாக்கில் நிலத்தடி நீர் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக தோட்ட விவசாயத்திற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. கண்மாய் பாசன நிலங்களும், குறிப்பிட்ட காலத்தில் சாகுபடி செய்ய முடிகிறது. கம்பம், கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் உள்ளிட்ட பகுதிகளில் கணிசமாக நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது என்றார்.

**அறுவடையில் மிரட்டுது தூறல் : விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,00:24 IST

மானாமதுரை : சில நாட்களாக மானாமதுரையில் மழை பெய்து வருகிறது. இதனால் அறுவடைக்கு தயாராக உள்ள விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். வழக்கமாக ஆடியில் உழவு பணிகள் தொடங்கினால், பொங்கலுக்குள் அறுவடை முடிந்துவிடும். மானாமதுரை, திருப்புவனம் பகுதியில் கோ 46, ஐ.ஆர். 50, ஆடுதுறை, ராஜராஜன் 1000 போன்ற நெல் ரகங்கள் நடவு செய்யப்பட்டிருந்தன. வைகை அணையில் தண்ணீர் திறப்பு தாமதமானதால் அறுவடைக்கு இன்னும் சில நாட்கள் உள்ளன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக தூறல் பெய்து வருவதால் காய்ந்திருந்த நெல் பொதிகள் ஈரமாகி, வயல்களில் உதிர்கின்றன. விவசாயி பாண்டி கூறுகையில், ""விவசாய பணிகளை துவக்கியதில் இருந்தே, எதிர்பாராமல் பருவநிலை அடிக்கடி மாறி வருகிறது. நாற்று, நடவு, உரம் என அதிக செலவு ஏற்படுள்ளது. மழையால் நெல் மணிகள் ஈரமாகி வயலிலேயே உதிரும். இதனால் எதிர்பார்த்த மகசூல் கிடைக்காது. மாறும் பருவ நிலையால் பாடுபட்டு சாகுபடி செய்த நெல் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது," என்றார்.

**மரக்கன்றுகள் வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,00:42 IST

மதுராந்தகம் : காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட பசுமைத் தாயகம் சார்பில், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் விழா, மதுராந்தகம் நகராட்சி அலுவலகம் அருகில் நடந்தது.மாவட்ட அமைப்பாளர் குமரவேல் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் சவுமியாஅன்புமணி பொதுமக்களுக்கு ஆயிரம் மரக்கன்றுகள் வழங்கினார். எம்.எல்.ஏ., க்கள் ஆறுமுகம், மூர்த்தி, பா.ம.க., மாவட்டச் செயலர் கங்காதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒருங்கிணைந்த அமைப்பாளர் கண்ணன் வரவேற்றார். நகரச் செயலர் ராஜா நன்றி கூறினார்.

**தேயிலை ஏலத்தில் களை பசுந்தேயிலைக்கு நல்ல விலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,23:40 IST

குன்னூர்: குன்னூர் தேயிலை ஏல மையத்தில், தேயிலைக்கு கிராக்கி அதிகரித்ததால், விலையில் உயர்வு தென்பட்டது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டின் 2வது ஏலம் நடந்தது.

மொத்தம் 14.22 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 9.62 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 4.60 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில், பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் அதிகளவு பங்களித்தனர்; வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி குறைந்ததால், கர்னாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் மாநில வர்த்தகர்களும் அதிகளவு பங்களித்தனர்; ஏற்றுமதி, உள்நாட்டு வர்த்தகர்கள் மத்தியில் போட்டி அதிகரித்ததால், அனைத்து ரக தூளின் விலையும் கிலோ 3 ரூபாய் அதிகரித்தது; விற்பனைக்கு வந்த பெருமளவு தேயிலை தூள் விற்று தீர்ந்தது. சி.டி.சி., ரகத்தில் கோத்தகிரி தர்மோனா தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 153 ரூபாய் விலை கிடைத்தது; 80க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன; ஆர்தோடக்ஸ் ரகத்தில் சட்டன் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 186 ரூபாய் விலை கிடைத்தது; 40க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. இலை ரக விற்பனையில் சாதாரண ரக தூளுக்கு 42 - 46, சிறந்த ரக தூளுக்கு 80 - 130, டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 54-60 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 90 - 132 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 3க்கான ஏலம் வரும் 20, 21 தேதிகளில் நடக்கவுள்ளது. மொத்தம் 9.54 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்குள்ளது; இலை ரகம் 9.54 லட்சம், டஸ்ட் ரகம் 6.60 லட்சம் கிலோ அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 4.68 லட்சம் கிலோ குறைவு. சிறு விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 11.50 - 14 ரூபாய் விலை கிடைத்தது; முதல் ரக பசுந்தேயிலைக்கு 18 ரூபாய் விலை கிடைத்தது.

**அழுகுகிறது மஞ்சள்; விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,22:31 IST

திருப்பூர்: திருப்பூர், பொங்கலூர் பகுதியில் உள்ள குட்டைகள் நிரம்பி வழிகின்றன. அருகில் இருக்கும் மஞ்சள் பயிர்கள் அழுகுவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வடகிழக்கு பருவ மழையின் தீவிரத்தால், அணைகள் நிரம்பியுள்ளன. அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீர், பி.ஏ.பி., கால்வாயில் திறந்து விடப்பட்டது. மழை காலத்தில் விவசாயத்துக்கு தண்ணீர் தேவைப் படாது என்பதால், கிராமங்களில் உள்ள குட்டை களுக்கு தண்ணீர் திருப்பி விடப்பட்டது. பி.ஏ.பி., கால்வாயில் இருந்து அரு கில் இருக்கும் மண் ஓடைகள் மூலம் குட்டைக்கு தண்ணீர் செல்கிறது. கடந்த மூன்று வாரங் களாக, பொங்கலூர், திருப்பூர் சுற்றுப்பகுதி கிராமங்களில் குட்டைகள் நிரம்பி வருகின்றன. நேற்று, முத்தணம்பாளையம் ஊராட்சி காட்டுபாளையம் குட்டை நிரம்பும் தருவாயில் இருந்தது. இங்கிருந்து, விஜயாபுரம் குட்

டைக்கு தண்ணீர் செல்ல உள்ளது. குட்டைகளுக்கு தண்ணீர் விடுவது, விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித் தாலும், மஞ்சள் பயிரிட் டுள்ள விவசாயிகளுக்கு வருத்தத்தை ஏற்படுத்தி வருகிறது. கடந்தாண்டு குவிண் டால் 16 ஆயிரம் ரூபாய் வரை மஞ்சள் விற்றது. இதைத்தொடர்ந்து மஞ்சள் பயிரிடும் பரப்பு அதிகரித்தது. சில விவசாயிகள், தங்கள் விளைநிலம் முழுவதும் மஞ்சள் பயிரிட்டுள் ளனர். தற்போது அதிக மழை மற்றும் குட்டைகளில் தண்ணீர் நிரம்பியதால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. அதிக தண்ணீர் தேக் கத்தால், "ஒரம்பு' (ஒரம்பு என்றால் குட்டை நிரம்பி, விளைநிலத்தில் ஏற்படும் தண்ணீர் கசிவை குறிப்பிடுகின்றனர்) எடுத்துள்ளது. குட்டை மற்றும் சிறிய பள் ளங்களுக்கு அருகில் உள்ள மஞ்சள் பயிரில் அழுகல் ஏற்படுகிறது. இதனால், மஞ்சள் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். விவசாயிகள் கூறுகையில், "ஏக்கருக்கு 30 குவிண் டால் வரை மகசூல் கிடைக் கும். இன்னும் ஒரு மாதத் தில் அறுவடையாகும் சூழல் உள்ளது. ஒரம்பு ஏற்பட்டு, பயிர்கள் அழுகுவதால், ஏக் கருக்கு 10 குவிண்டால் வரை விளைச்சல் பாதிக் கும் நிலை உள்ளது. சில விவசாயிகளுக்கு முழு அள வில் பாதிப்பு ஏற்பட்டுள் ளது. நல்ல விலை கிடைக் கும் நேரத்தில் நஷ்டமாவது கவலை அளிக்கிறது,' என்றனர்.

**விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,02:15 IST

குளித்தலை: குளித்தலை அடுத்துள்ள தோகமலை முதலைப்பட்டி கிராமத்தில் விதை கிராமத்திட்டத்தின் கீழ் நெல் விவசாயிகள் பயிற்சி நடந்தது. பஞ்சாயத்து தலைவர் அனந்தநாயகி தலைமை வகித்தார். ஒன்றிய குழு துணை தலைவர் தனம் சங்கபிள்ளை பேசினார். வேளாண் உதவி இயக்குனர் (பொ) மொஹைதீன், வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மாநில மற்றும் மத்திய மானிய திட்டங்கள் குறித்து பேசினார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் சிந்தாமணி தோட்டக்கலைதுறையின் மானிய திட்டங்கள் குறித்து பேசினார். விதைச்சான்று உதவி இயக்குனர் கைலாசபதி விதை சான்றளிப்பு துறையின் செயல்பாடுகள், வழிமுறைகள், விதைப்பண்ணையை பதிவு செய்தல் பற்றி பயிற்சி அளித்தார். குளித்தலை விதைசான்று அலுவலர் கிருஷ்ணமூர்த்தி விதை நெல்லின் முக்கியத்துவம், தரமான நெல் விதை உற்பத்தி மற்றும் விதைப்பண்ணை அமைத்தல் குறித்து விளக்கினார். வகுப்பில், துணை வேளாண்மை அலுவலர் கண்ணதாசன், இயற்கை வேளாண்மை, செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விரிவாக கூறினார். முன்னோடி விவசாயிகள் ரங்கசாமி, அர்ஜுனன், வீரமலை, சந்திரசேகரன், நடராஜன் உள்ளபட பலர் பயிற்சி பெற்றனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் குணசேகரன் செய்திருந்தார்.

**நெற்பயிருக்கு தண்ணீர் பாய்ச்சும் வழிமுறைகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,03:03 IST

மதுரை:""நெற்பயிரில் தண்ணீரை தேக்கியே வைத்திருந்தால் மகசூல் பாதிக்கும் அபாயம் உள்ளது," என கலெக்டர் காமராஜ் தெரிவித்துள்ளார்.அவர் கூறியிருப்பதாவது: இந்த ஆண்டு நல்ல மழை பெய்து கண்மாய்கள் பெருகி உள்ளன. விவசாய பணிகளும் தீவிரமாக நடந்து வருகின்றன. நெல்லுக்கு அதிக நீர்ப் பாய்ச்சினால்தான் கூடுதல் விளைச்சல் இருக்கும் என விவசாயிகளிடையே தவறான கருத்து உள்ளது. காய்ச்சலும், பாய்ச்சலுமாக இருந்தால்தான் சிறப்பான மகசூல் இருக்கும். இந்த ஆண்டு பலர் ராஜராஜன்-1000 நெல் சாகுபடியை பலர் செய்துள்ளனர். இம்முறையிலும், சாதாரண சாகுபடி முறையிலும் குறைந்தளவு நீர்ப்பாய்ச்சினால்தான் அதிகளவு மகசூல் பெற முடியும். 2.5 செ.மீ., அளவு நீரை நிரப்பி, அது மறைந்து, வெடிப்பு தெரிந்தபின்பே மீண்டும் நீரை பாய்ச்ச வேண்டும்.தண்ணீர் தொடர்ந்து தேங்கி நின்றால் விளைச்சல் பாதிக்கும். எனவே தேவைக்கேற்ப நீரை பாய்ச்ச வேண்டும். அதிக நீரை பாய்ச்ச வேண்டும் என்ற தவறான எண்ணத்தை விவசாயிகள் மாற்றினால்தான், அறுவடைக்குப் பின் மற்றொரு குறைந்தகால பயிர் சாகுபடியையும் செய்ய இயலும்.மேலும் நெற்பயிர் சாகுபடியில் இலை வண்ண அட்டையை பயன்படுத்தி, தேவைக்கேற்ப தழைச்சத்து உரத்தை இடவேண்டும். தேவைக்கேற்ப பயன்படுத்தினால்தான் தற்போதுள்ள குளிர்ந்த சூழலுக்கு பூச்சித் தாக்குதலும் குறையும்,என கூறியுள்ளார்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருட்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,02:34 IST

சோழவந்தான்:சோழவந்தானில்விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப் பட்டது. பேரூராட்சி தலைவர் ரா.கலாவதி தலைமைவகித்தார். வேளாண் உதவி அலுவலர் அம்பிகாபதிவரவேற்றார். நடமாடும் மண் பரிசோதனை அலுவலர் சிவகுமரன் மண் எடுக்கும்முறை குறித்து விளக்கினார். வாடிப்பட்டி வேளாண் உதவி இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி இடுபொருட்களை வழங்கினார். உதவி வேளாண் அலுவலர் சந்தனக்கருப்பு நன்றி கூறினார்.

## கூடலூரில், உழவர் சந்தை அமைப்பதற்கான பணிகள் தீவிரம்

கூடலூர், ஜன.18–
கூடலூரில் பல்வேறு பிரச்சினைகளுக்கு பிறகு உழவர் சந்தை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கூடிய விரைவில் பூமி பூஜை நடைபெற உள்ளது.

உழவர் சந்தைக்கு இடம் தேர்வு செய்ய தாமதம்

கூடலூர் நகராட்சி பகுதியில் உழவர் சந்தை அமைக்க தமிழக அரசு கடந்த 1½ ஆண்டு களுக்கு முன்பு உத்தரவிட்டது. இதையொட்டி உழவர் சந்தை அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டனர். ஆனால் பல்வேறு பிரச்சினை களால் இடம் தேர்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் கூடலூர் புதிய பஸ் நிலையம் அருகே நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கூடலூர் ஊராட்சி ஒன்றிய பாழடைந்த கட்டி டங்கள் இருந்தன. இந்த கட்டிடங்களை அகற்றி கூடலூர் நகராட்சிக்கு நிலத்தை ஒப்படைப்பதில் பிரச்சினை எழுந்தது. பின்னர் உயர் அதிகாரிகள் தலையீட் டின் பேரில் அந்த பிரச்சினை முடிவுக்கு வந்தது.

உழவர் சந்தை அமைக்கும் பணி தீவிரம்

பின்னர் பாழடைந்த கட்டிடங்களை இடிக்கும் போது அருகே இருந்த கோவிலின் மதில்சுவரை இடித்து விட்டதாக புகார் எழுந்தது. பின்னர் அந்த பிரச்சினையும் முடிவுக்கு வந்தது. ஆனால் சந்தை அமைக்கும் பணி விரைவு படுத்தப்படாமல் இருந்தது.

இதனால் கூடலூருக்கு உழவர் சந்தை வருமா? என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் எழுந்தது. இந்த நிலையில் உழவர்சந்தை அமைப்பதற்கான பணிகளை தமிழக அரசு முடுக்கி விட்டுள் ளது.

இதற்காக நகராட்சி நிலம் வேளாண் விற்பனை துறை யி டம் ஒப்படைக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

விரைவில் பூமி பூஜை

இன்னும் சில வாரங்களில் கூடலூரில் உழவர் சந்தை அமைப்பதற்கான பூமி பூஜை நடைபெற உள்ளதாக வேளாண் விற்பனை துறை அலுவலர்கள் தெரிவித்துள்ள னர். இதற்கான பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.

## உள்நாட்டு வர்த்தகம் 'களை' கட்டியதால் குன்னூர் ஏலத்தில் தேயிலை தூளுக்கு ரூ.3 விலை ஏற்றம்

*குன்னூர், ஜன.18–*

*உள்நாட்டு வர்த்தகம் 'களை' கட்டியதால் குன்னூர் தேயிலை ஏலத்தில் தேயி லை தூளுக்கு ரூ.3 வரை விலை ஏற்றம் இருந்தது.*

*தேயிலை ஏலம்*

*குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்களில் தேயிலை ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஏலத்தில் அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளவர் கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஏலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.*

*இந்த ஆண்டின் விற்பனை எண் 2–க்கான ஏலம் கடந்த வாரம் 13, 14 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 14 லட்சத்து 22 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 9 லட்சத்து 63 ஆயிரம் கிலோ இலை ரகமாக வும், 4 லட்சத்து 59 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*ஏல நிலவரத்தை பொறுத்த வரை கடந்த விற்பனை எண் 1–க்கான ஏலத்தை போன்றே ரூ.3 விலை ஏற்றம் இருந்தது. வெளி நாட்டு வர்த்தகர்களாக பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாட்டு வர்த்தகர்கள் தேயிலை தூளை அதிகளவில் ஏலம் எடுத்தனர். உள்நாட்டு வர்த் தகம் களை கட்டியது.இதன் காரணமாக தேயிலை தூளுக்கு ரூ.3 வரை விலை ஏற்றம் இருந் தது.*

*ஆர்தோடக்ஸ்*

*சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக ரூ.153 இருந்தது. 80 தொழிற் சாலைகள் தங்களது தேயிலை தூளை ரூ.100க்கு மேல் விற் பனை செய்தனர். ரூ.186 என்று ஆர்தோடக்ஸ் குறைந்தபட்ச விலையாக ஏலம் சென்றது. 40 தொழிற்சாலை தங்களது தேயிலை தூளை ரூ.100க்கு மேல் விற்பனை செய்தன.சரா சரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.42–ல் இருந்து ரூ.46 வரை யிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.80–ல் இருந்து ரூ.130 வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.54–ல் இருந்து ரூ.60 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.90–ல் இருந்து ரூ.132 வரையிலும் ஏலம் சென் றன.*

*அடுத்த ஏலம்*

*விற்பனை எண் 3–க்கான தேயிலை ஏலம் வருகிற 20, 21 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்துக்கு 9 லட்சத்து 54 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது. தற்போது பனியின் காரணமாக தேயிலை வரத்து குறைவாக உள்ளது. வடமாநில தேயிலை தூள் வரத்தும் குறைவாக உள்ளதால் இனி வரும் வாரங்களில் தேயிலை தூளுக்கு விலை ஏற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.*